# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ அதி விசேஷமானது**

අංක 2477/ 14 - 2026 පෙබරවාරි මස 23 වැනි සඳුදා - 2026.02.23

2477/14 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ)(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2019, மே மாதம் 31 ஆம் திகதிய 2125/65 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 105 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே. டி. லால் காந்த,<br>
கமத்தொழில், கால்நடை வளங்கள்,<br>
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4 - 3/15/2016/SW/416.<br>
காணி எடுத்தல் உத்தியோகத்தர் குறிப்பு இல. ARA/LND/ ACQV1/D3/25.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி<br>
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,<br>
"மிஹிகத்த மெதுர"<br>
காணிச் செயலகம்,<br>
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,<br>
பத்தரமுல்லை,<br>
2026, பெப்புருவரி 12.

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அரநாயக்க பிரதேச செயலாளர் பிரிவில் கன்ஹத பலாத சிறு பிரிவில், இல. 47 மோராகம்மன கிராம அலுவலர் பிரிவில் மோராகம்மன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2017.05.31 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட KE/ARN/2017/110 ஆம் இலக்க, முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

**01. துண்டு ‘A’ – பல்கும்புர - விஸ்தீரணம்: 0.0212 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ; கிழக்கு: பல்கும்புர; தெற்கு : பல்கும்புர மற்றும் கால்வாய்; மேற்கு : கால்வாய்.

EOG 02 - 0190

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021, ஒகத்து மாதம் 12 ஆம் திகதிய 2240/27 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 161 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித் தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்

கே. டி. லால் காந்த
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4 - 3/08/2019/CEB/613.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் குறிப்பு இல. : MON/ WEL/ LND/ 13/05/ 02/2020/01.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத்த மெதுர"
இல. 1200/6, காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2026, பெப்புருவரி 12.

**அட்டவணை**

ஊவா மாகாணம், மொணராகல மாவட்டம், வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில் இல. 152 கொட்டிகன்பொக்க கிராம அலுவலர் பிரிவில், திம்புலமுரே கிராமத்தில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட MO/WLL/2020/411 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் (இகி.வ.669) துண்டு A இல் குறிப்பிடப்பட்டுள்ள கடத்திரள் வரைபட இல. 720284 இல் தொகுதி 01, தாள் இல. 01, 0.0182 ஹெக்டயார் விஸ்தீரணத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:

**01. துண்டு இல. 1 – திம்புலமுரேகும்புரே - விஸ்தீரணம்: 0.0182 ஹெக்டயார்**

வடக்கு, கிழக்கு, தெற்கு : இ.கி.வ 669 இல் துண்டு இல. 44; மேற்கு : இ.கி.வ 669 இல் துண்டு இல. 49.

EOG 02 - 0191

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.